செ.வெ.எண்: 325/2016 நாள்: 03.06.2016

# பத்திரிகை செய்திக்குறிப்பு

தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த சிறு / குறு விவசாயிகள் விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் நீர்ப்பாசன வசதிகள் அமைக்க மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கவும், வணிகர்கள் மற்றும் கைவினைஞர்கள் சிறுவணிகம் மற்றும் மரபு சார் தொழில்கள் தொடங்கிட சிறுவணிகக்கடன் வழங்கிடவும், சிறுவணிகம் செய்ய தனிநபர் கடன் வழங்கிடவும், மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட தொழில்கல்வி, தொழில்நுட்ப கல்வி மற்றும் பட்டமேற்படிப்பு பயில கல்விக் கடன் பெற்றிடவும், பெண்களின் சுயசார்பு நிலையினை வலியுறுத்தும் நோக்குடன் சிறு வணிகக்கடன் வழங்கிடவும், மகளிர் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் ஆண்கள் சுயஉதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு சிறுகடன் வழங்கிடவும் தகுதியுள்ள நபர்களிடமிருந்து 2016-2017-ம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

<u>விண்ணப்பதாரர்களின் தகுதி விபரம்</u>

1. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினராக இருத்தல் வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறமாயின் ரூ.98,000/- மற்றும் நகர்புறமாயின் ரூ.1,20,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.
4. ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.
5. சுயஉதவி குழு தொடங்கி ஆறு மாதங்கள் பூர்த்தியாகி இருக்க வேண்டும். திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) அவர்களால் தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விரும்புவோர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகிய அலுவலகங்களிலிருந்து கடன் விண்ணப்ப படிவங்களை பெற்று சாதி, வருமானம், இருப்பிடச் சான்றிதழ்கள், குடும்ப அட்டை நகல், கல்விக்கடனை பொறுத்தவரை கல்லூரி சேர்க்கைக்கான ஒதுக்கீடு ஆணை மற்றும் Bonafide Certificate போன்ற ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 30.06.2016 வரை சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளில் சமர்ப்பித்திட வேண்டும். எனவே தகுதியுடைய நபர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயனடையுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

(ஒம்) சஜ்ஜன்சிங் ரா.சவான்
மாவட்ட ஆட்சித் தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம

/உண்மை நகல் - உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.